Registered ... Paper

ஆனி (92)

பக்கங்கள் 04 விலை ரூபா; 5-00

நல்லூர் கிளை நூலகம் ... யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 14 28 - 06 - 1992 ஞாயிற்றுக்கிழமை ஓசை 131

## ஆசிரியர்கள் இடமாற்றம் முற்றாக ஒழிக்கப்படும்

[கொழும்பு]

அரசு ஆசிரியர்கள் இடமாற்றம் செய்யப்படும் முறையை ஒழிக்கவுள்ளது. ஆசிரியர்கள் ஓய்வு பெறும்வரை ஒரே பாடசாலையில் தொடர்ந்து பணியாற்ற வேண்டும் என்பதே அரசின் கொள்கை எனத் தெரிவிக்கப்படுகிறது. அந்தந்தப் பகுதிகளிலேயே ஆசிரியர்களை வேலைக்கமர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்று ஜனாதிபதி ஆர் பிரேமதாசா புத்தளை கம்மூதாவப் பொருள் காட்சி அரங்கில் மொனறாகலைப் பாடசாலை மாணவர் தலைவர்களைச் சந்தித்தபோது கூறினார்.

# யாழ். குடாநாட்டின்மீது படையெடுப்பு

# சிறிலங்கா இராணுவம் போர்முரசு

## உலகத் தமிழர் சர்வதேச மாநாடு

(கொழும்புத்துறை)

உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் சர்வதேச மாநாடு எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டுக்குஇலங்கைக் கிளையிலிருந்து பேராளர்களை அனுப்புவது சம்பந்தமாக ஆராய்வதற்கான கலந்துரையாடல் ஆலோசனைக் கூட்டம் இன்று 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 30 மணியளவில் இலங்கைக் கிளையின் தலைவர் திரு. ஆ

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மக்களை வெளியேறுமாறு மிரட்டல்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டின் மீது பாரிய தாக்குதல் ஒன்றை நடத்தப் போவதாக நேற்றுக் காலை சிறிலங்கா இராணுவம் போர் முரசு கொட்டியது. அத்தோடு யாழ் நகரப்பகுதியிலிருந்தும், தென்மராட்சிப் பகுதியில் இருந்தும மக்களை வெளியேறுமாறும் மிரட்டியுள்ளது.

யாழ்ப்பாண வானொலி என்ற பெயரில் சிறிலங்கா அரச பலாலி இராணுவமுகாமிலிருந்து ஒலிபரப்பாகும் வானொலி மூலமே இம்மிரட்டல் விடுக்கப்பட்டது. இந்த அறிவிப்பில் யாழ். நகரப்பகுதியிலும். தென்மராட்சிப் பகுதியிலும் இராணுவம் பாரிய தாக்குதலை மேற்கொள்ளத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிவித்ததாகவும் இதனால் அப்பகுதியில் இருந்து மக்கள் வெளியேறி வேறிடங்களுக்குச் செல்லவேண்டுமெனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது

## காணாமல் போனோர் பற்றி கச்சேரியில் முறையிடலாம்

(கொழும்பு)

பொதுமக்கள் கடத்திச் செல்லப்பட்டது தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு முறைப்பாடுகளை கச்சேரிகளில் செய்வதற்கான ஒழுங்குகள் செய்துள்ளது. 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 11ஆம் திகதிக்குப் பின்னர் யாராவது கடத்தப்பட்டிருந்தால் அது குறித்து முறைப்பாடு செய்யலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மட்டக்களப்பு, அம்பாறை, மன்னார், யாழ்ப்பாணம், திருக்கோணமலை, ஹம்பாந்தோட்டை, மாத்தறை மாவட்டங்களிலுள்ள கச்சேரிகளில் முறைப்பாடுகளை செய்யலாம்.

பொதுமக்கள் தமது முறைப்பாடுகளை கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 2 ஆம் மாடி 115 ஆம் இலக்க கூடத்தில் அமைந்துள்ள ஜனாதிபதி ஆணைக்குழு அலுவலகத்திற்கு அனுப்பிவைக்கலாம்.

## மன்னாரில் ஆள் கடத்தல் மாணவர் மீது தாக்குதல்

(மன்னார்)

மன்னார் நகரில் இரவில் ஆள்கடத்தல் நடைபெறுவதாலும் தமிழ் மாணவர் தாக்கப்படுவதாலும் அங்குள்ள மக்கள் மத்தியில் பெரும் பதற்றம் நிலவுகிறது.

அண்மையில் மன்னார் நகர்ப் பகுதியில் இனந்தெரியாதோர் இரவு வேளையில் வீடுகளுக்குள் புகுந்து தமிழர் ஒருவரை கடத்திச் சென்றுள்ளனர்.

இதேவேளை மாணவர் ஒருவர் கடைக்குச் சென்று திரும்பும் வழியில் கம்பிகளாலும் சைக்கிள் செயின்களாலும் தாக்கப்பட்டுள்ளார்.

இதனால் ஆண் பிள்ளைகளை வீடுகளில் வைத்திருப்போர் நேரகாலத்துடன் வீடுகளுக்குள் முடங்குவதுடன் இனிமேல் வீடுகளில் கொள்ளைகளும் இடம் பெறுமோ என அச்சத்துடன் உள்ளனர்.

## யாழ். பாதுகாப்பு வலையம்: நிலைமையில் மாற்றமில்லை

### சர்வதேச செஞ்சிலுவை அதிகாரி அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலையைச் சூழவுள்ள பாதுகாப்புவலையம நீக்கப்பட்டுள்ளதாக வதந்தி ஒன்று யாழ். குடாநாடெங்கும் பரவி வருகிறது. யாழ். போதனா வைத்தியசாலையை தமது நிர்வாகத்தினுள் வைத்திருக்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சாலையைச் சூழவுள்ள பாதுகாப்பு வலயம் தொடர்ந்து பேணப்படும் என அவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்திலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கக் கிளைகளை மூடிவிடும்படியோ பாதுகாப்பு வலயத்தை நீக்கிவிடும்படியோ உத்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## பாதுகாப்பு வலையத்துள் பெருமளவு மக்கள்

## மல்வத்த தமிழர்களை பாதுகாக்குமாறு மகஜர்

(அம்பாறை)

மல்வத்தை பிரதேசத்தில் வாழ்ந்த தமிழர்களின் உடைமைகளை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கோரும் மகஜர் ஒன்றை மல்வத்தை பிரஜைகள் குழுத்தலைவர் வே. தங்கதுரை ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

அம்மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது அம்பாறை மாவட்ட எல்லைப் பிரதேசமான மல்வத்தை தமிழ் பிரதேசத்திலுள்ள மல்லிகைத் தீவு, வளத்தாப்பிட்டி, புதுநகரம், கணபதிபுரம், பாரதிபுரம், தம்பிநாயகபுரம், வள்ளுவர் கிராமம் ஆகியவற்றைச் சேர்ந்த சுமார் 2000 குடும்பங்கள் கடந்த 1990 ஜூன் மாத அனர்த்தங்களால் வீடு வாசல்களையும் குடும்ப உறுப்பினர்களையும் இழந்து அகதிகளாகி வீரமுனை ஸ்ரீசித்தா யாத்திரைப் பிள்ளையார் கோவிலில் இருந்தனர்.

அப்போது இவர்களில் 60 பேர் முஸ்லிம் ஆயுதபாணிகளால் வெட்டியும சுட்டும் கொல்லப்பட்டனர். காயங்களுடன் மருத்துவ மனைக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியா திரும்ப இருப்போருக்கு இலங்கை குடியுரிமைக்கு முயற்சி செய்யப்படும்

(கொழும்பு)

தாயகம் திரும்பக் காத்திருப்பவர்களுக்கு இலங்கையின் குடியுரிமை பெற்றுக் கொடுப்பது தொடர்பாக சிறிலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் என்று பண்டாரவளையில் அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார்.

அங்கு பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் ... என்று கவலைப்பட்டுக் கொண்டு எவரும் வீண் கலவரமடையத் தேவையில்லை என்றும் குறிப்பிட்டார்.

## வீர வணக்கம்

வீரவேங்கை

சசிகுமார்

அம் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது அம்பாறை மாவட்ட எல்லைப் பிரதேசமான மல்வத்தை தமிழ் பிரதேசத்திலுள்ள மல்லிகைத் தீவு, வளத்தாப்பிட்டி, புதுநகரம்,

அப்போது இவர்களில் 60 பேர் முஸ்லிம் ஆயுதபாணிகளால் வெட்டியும் சுட்டும் கொல்லப்பட்டனர். காயங்களுடன் மருத்துவ மனைக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தொழிற்சங்க சக்திக்கு முன்னுரிமைவழங்குவோம்

**- ரணில்**

(கொழும்பு)

அரசின்ஆதரவைஎதிர்பார்க்காமல் நாம் எமது தொழிற் சங்க பலத்தை உறுதிப்படுத்தி அதன்மூலம்எமதுஉரிமைகளை வென்றெடுக்க வேண்டும் நாளை ஆட்சி மாறிவிட்டால் என்ன செய்யப்போகிறோம் எனவே நாம் தொழிற் சங்க சக்திக்கே முன்னுரிமைவழங்க வேண்டும்.

இவ்வாறுகைத்தொழில்விஞ்ஞான தொழில் நுட்பத்துறை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கா இலங்கை தேசியதோட்டத் தொழிலாளர் சங்க தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற ''தொழிற்சங்கவளர்ச்சியில் மாவட்ட அமைப்புக்களின் பங்களிப்பு'' எனும் கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்

அரசின் கண்காணிப்பின் கீழ் இருந்த தோட்டங்கள் இப்பொழுது தனியார் நிர்வாகத்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## ஐம்பது சதவீதம் மனநோயாளிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்திய சாலைக்கு சிகிச்சைக்காக வரும் வெளி நோயாளர்களில் சுமார் ஐம்பது சதவிகிதத்துக்கும் அதிகமானோர் மன நோயால் பாதிக்கப்பட்டிருப்பதாக வைத்திய கலாநிதி சோமசுந்தரம் தெரிவித்துள்ளார்.

## தெரிவுக்குழு கூட்டத்தில் ஆர்வமுடன் பங்குபற்றும்

(கொழும்பு)

பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் கூட்டங்களில் சுதந்திரக் கட்சி ஆர்வமுடன் பங்குபற்றும் என்று அக் கட்சியின் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க தம்மைச் சந்தித்த தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளிடம் உறுதி அளித்துள்ளார்.

குடாநாடெங்கும் பரவி வருகிறது. யாழ். போதனா வைத்திய சாலையை தமது நிர்வாகத்தினுள் வைத்திருக்கும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளை பிரதிநிதியான திரு யோன்பொன்சுவா, இதனை மறுத்துள்ளார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டிருக்கும் வரை யாழ் போதனா வைத்திய

## பாதுகாப்பு வலையத்துள் பெருமளவு மக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரப்பகுதியில்அமைந்திருக்கும் வைத்தியசாலைப் பாதுகாப்பு வலையத்திற்குள் இடம் பெயர்ந்த மக்கள் தஞ்சமடைந்திருக்கின்றனர்.

நேற்று திடீரென ஏற்பட்ட பரபரப்பான நிலைமையைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான மக்கள் இப்பாதுகாப்பு வலையப்பகுதிக்கு வந்து தஞ்சமடைந்திருக்கின்றனர். இப் பாதுகாப்பு வலையப் பகுதியில் காணப்படும் வர்த்தக நிலையங்கள், தாள்வாரப்பகு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# கரையோரப் பகுதிகளிலிருந்து மக்கள் இடம்பெயர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரத்தை அண்டிய கரையோரப் பகுதிகளைச்சேர்ந்த மக்கள் பெருமளவில்இடம் பெயர்ந்து வேறு பகுதிகளுக்குச் சென்றுள்ளனர்.

குருநகர், பாசையூர், நாவாந்துறை, கொட்டடி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் நேற்று மேற்படி பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து ஆனைக்கோட்டை, மானிப்பாய், கொக்குவில் ஆகிய பகுதிகளுக்குச் சென்றுள்ளனர். இராணுவத்தாக்குதல்கள் நடைபெறலாம் என்று அஞ்சியே இம் மக்கள்இடம்பெயர்ந்துள்ளனர்

(நேற்று வானொலி மூலம் வெளியாகிய அறிவிப்பைத் தொடர்ந்து யாழ் குடாநாடு முழுவதும் ஒருவித பரபரப்பு நிலையேற்பட்டது. எனினும் மேற்படி பகுதி மக்களும், தென்மராட்சியின் சில பகுதிகளைச்சேர்ந்த மக்களும் தமது குடியிருப்புப் பகுதிகளைவிட்டு வெளியேறியுள்ளனர்.

செட்டிகுளம் பகுதியில்

# பாரிய சிங்களக் குடியேற்றம் விகாரையும் கட்டப்படுகிறது

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள செட்டிகுளம் பிரதேசத்தின் ஒரு பகுதியில் பாரிய சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளப்படுகிறது. அங்கு பௌத்த விகாரை ஒன்று கட்டப்பட்டுள்ளது. பொலிஸ் நிலையம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது

இப் பிரதேசத்தில் உள்ள வீரபுரம் என்ற தமிழ்க் கிராமத்திலும் அப்பகுதியை அண்டிய இடங்களிலுமே சிங்களக் குடியேற்றம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சிறிலங்கா இராணுவம் மற்றும் பொலிசாரின் ஒத்துழைப்புடன் அரசாங்கம் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது.

வீரபுரம் பாரம்பரிய தமிழ்க் கிராமமாகும். இங்கு குடியிருந்த தமிழ்க் குடும்பங்கள் தற்போதைய இராணுவ நடவ

[4 ஆம் பக்கம் பார்க்க]

யில் அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார்.

அங்கு பொதுக்கூட்டமொன்றில் உரையாற்றிய அவர் மேலும் கூறுகையில் சிறிமாவோ - சாஸ்திரி உடன்படிக்கையின் கீழ் இந்தியா திரும்புவதற்கு விரும்பி கடவுச்சீட்டு பெற்ற எண்பத்து நான்காயிரம் பேரும் அவர்களது குடும்பத்தினரும் தொடர்ந்தும் இலங்கையிலேயே வாழ விரும்புவதால் அவர்களின் எதிர் காலம் பற்றி அரசுடன் பேசி வருகின்றோம். விரைவில் நல்லதொரு முடிவு காணப்படும். எனவே இந்தியக் கடவுச்சீட்டைப் பெற்று அது காலாவதியாகி விட்டதே

## வீரவேங்கை சசிகுமார்

மட்டக்களப்பு மாவட்டத்தில் 25-06-92 அன்றிரவு 9.30 மணியளவில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் பாம்பு தீண்டிச் சாவடைந்தார்.

வீரவேங்கை சசிகுமார்(தவராஜா ரவிச்சந்திரன், மகிழவெட்டுவான் ஆயித்தியமலை, மட்டக்களப்பு) என்பவரே இவ்வாறு சாவடைந்தவராவார்.

இவருக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

இந்தியா திரும்பிய மக்கள் சார்பில்

# ராஜ்ய சபாவில் பிரதிநிதி மணவைத்தம்பி கோரிக்கை

[கொழும்பு]

இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு திரும்பிச் சென்ற மக்களின் சார்பில் பாராளுமன்ற ராஜ்ய சபாவில் ஒரு பிரதிநிதியை நியமிக்குமாறு இலங்கை குடிபெயர்ந்தோர் நலவுரிமைச் சங்க பொதுச் செயலாளர் ஏ. வை. எஸ். மணவைத்தம்பி இந்தியத் தூதுவரகம் மூலம் இந்திய ஜனாதிபதியையும், பிரதமரையும் கோரியுள்ளார்.

இந்தியாவிற்கு திரும்பியவர்கள் உதவிகள், சலுகைகள், உரிமைகள், தொழில வாய்ப்புகள் பெறுவதற்கு இது வசதி செய்யும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். அமைச்சர் தொண்டமானுக்கும் அவர் இதுபற்றி அறிவித்துள்ளார்.

## அமைய ஊழியர் பதவி நீக்கம்

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்டத்தில் உள்ள கைப்பணி பொருட்கள் சபையில் பல வருடங்களாகக் கடமையாற்றிய அமைய ஊழியர்கள் ஏழு பேர் வடக்கு கிழக்கு

(4 ஆம் பக்கம் பார்க்க)

# பல்கலைக்கழகஅனுமதிமுறை கண்டித்துநாளை ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

பல்கலைக் கழகங்களுக்கு மாணவர் அனுமதிக்கப்படுவதில் அரசு கடைப்பிடிக்கவிருக்கும் தரப்படுத்தல் முறையைக் கண்டித்து நாளை திங்கட் கிழமை ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடைபெறவுள்ளது.

பல்கலைக்கழகத்திலிருந்து ஆரம்பமாக இருக்கும் இப் பேரணியில் பாடசாலை மாணவர், ஆசிரியர் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இப் பேரணியானது யாழ். அரசாங்க செயலகத்தை அடைந்து அங்கு அரசாங்க அதிபரிடம் மகஜரொன்றைக் கையளிக்க இருப்பதுடன் செஞ்சிலுவைச் சங்கத்தினரிடமும் மகஜர் ஒன்று கையளிக்கப்படவுள்ளது.

# எதிரியின் படையெடுப்பை ஒன்றுசேர்ந்துமுறியடிப்போம்

**- இளம்பரிதி**

எமது பாதுகாப்பை நாமே உறுதி செய்து கொண்டு எதிரியின் படையெடுப்பை ஒன்று சேர்ந்து முறியடிப்போம் என யாழ் மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் இளம்பரிதி வெளியிட்ட செய்தியில் தெரிவித்துள்ளார்.

அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:-

சிறிலங்கா இனவாத அரசும் இராணுவமும் எம் மக்கள் மீது அக்கறை கொண்டது போல தனது வெகுசனத் தொடர்பு சாதனங்கள் மூலம் பொய்யான செய்திகளை விடுத்தும், வதந்திகளைப்பரப்பியும் மக்களைத் தமது சொந்த இருப்பிடங்களிலிருந்து இடம் பெயரவைத்துப் பொது இடங்களில் கூடச் செய்து இலகுவாகக் கொன்

( 4 ஆம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### புலமைப் பரிசில்

அரசாங்கத்தால் 26-4-1992 (ஞாயிறு) நடத்தப்பட்ட பரீட்சை வினாத்தாள்கள் விடைகளுடன் விற்பனையாகின்றன. பாடசாலைகளுக்கும், தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் விசேட கழிவுண்டு. பரீட்சைப் பகுதி, Bond கல்வி நிறுவனம், யாழ்ப்பாணம். (சி/4598)

### புலமைப் பரிசில் பரீட்சை

ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான விசேட வினாத்தாள்கள் பெற்றுக் கொள்ளலாம். விடையளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்திக் கொடுக்கப்படும். Bond Institutes 58A ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (சி/4609)

### விற்பனையாகின்றன

A/L வினாவிடை (உயர்கல்விப் பதிப்பகம் கொழும்புத்துறை) CR கொப்பிகள், 5-ம் ஆண்டு சட்டுரைத் தேன்துளி 60 CHINA கொப்பிகள் மலிவு விலையில் விற்பனையாகின்றன. மண்டேலா புத்தகசாலை, யாழ்ப்பாணம். அரஸ் புத்தகநிலையம், யாழ்ப்பாணம் [2708]

## மேலும் 16 பேருக்கு நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ் செயலகத்தால் நேற்று முன்தினம்மேலும் 16 பேருக்கு எழுதுவினைஞர் பதவிக்கான நியமனம் யாழ். அரச அதிபரினால் வழங்கப்பட்டுள்ளது.

இதுவரை எழுது வினைஞர் போட்டிப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டவர்களின் 134 பேரிற்கு அரச சார்பான நிறுவனங்களில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு பகுதி பகுதியாக அரச சார்பான நிறுவனங்களில் ஏற்படும் வெற்றிடங்களில் தேவைக்கேற்ப நியமிக்கப்படுவர் என தெரிவிக்கப்படுகிறது [பா]

## கலந்துரையாடல்

யாழ். இந்துமகளிர் கல்லூரியில்பெற்றோர் ஆசிரியர் கலந்துரையாடல் ஒன்று அதிபர் திருமதி இ. நாகராசா தலைமையில் கடந்தவியாழனன்று நடைபெற்றது.

---

## ஸ்ரீதர் திரையரங்கில்

தினசரி மாலை 4.00 மணிக்கு

சனி, ஞாயிறு தினங்களில்

மாலை 4.00 6.00 மணி

காட்சிகளாக காண்பிக்கப்படுகிறது

புதிய வெளியீடு

# EAGLE HAS LANDED

(கழுகு தரையிறங்கி விட்டது)

[4597]

---

## முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



**கப்டன வதனன்**

(கந்தசாமி ரவிச்சந்திரன்)

மலர்வு : 20 - 03 - 1969

வீரச்சாவு : 28 - 06 - 1991

எரியும் நெருப்பில் இறங்கி நடந்தவன்
எல்லையில் எதிரியை விரட்டியடித்தவன்
வரிப்புலிச் சேனையில் வளர்ந்து தெளிந்தவன்
வானரப்படைக்கிவன், சிம்மசொப்பனம்!
சிரித்துக்கொண்டே செருக்களம் சென்றவன்
செந்தகுருதியால் மண்ணை நனைத்தவன்!
விரியும் பூவாய், விண்ணாய், கடலாய்
விழிகளின் முன்னால் நிறைந்து கலந்தவன்.

— வவுனியா வாழ் மக்கள்

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

(2721]

---

## தனியார் கல்விநிறுவன ஒன்றியம் யாழ். மாவட்டம்

## விசேட பொதுக் கூட்டம்

புதிய ஒழுங்கு விதிகளும் அவற்றின் நடைமுறைகளும் முடிவெடுக்கப்படவுள்ளது. இவற்றை நேரில் அறிந்து கொள்ள யாழ்ப்பாணம், மருதனாமடம், சண்டத்தரிப்பு வடமராட்சி, தென்மராட்சி ஆகிய ஐந்து கல்விக் கோட்ட தனியார் கல்வி நிறுவன உரிமையாளர்கள் ஆசிரியர்கள், பிரத்தியேக வகுப்பு ஆசிரியர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளவும்

இடம்: புதிய விஞ்ஞான கல்விக்கழகம்

(எழிலகம முன்பாக)

காலம் : 29. 6. 92 (திங்கள்) காலை 10 மணி

விடுதலைப்புலிகளின் கல்விசார் முக்கிய பிரமுகர்கள் கலந்து கொள்வார்கள் கூட்ட முடிவுகள் தனிப்பட்ட முறையில் அறிவிக்கப்படமாட்டாது

பொதுச்செயலாளர்

(4616)

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி

வீரப் பிறப்பு: 1 - 10 - 1974



வீரச் சாவு: 29 - 05 - 1992

**வீரவேங்கை தமிழன்**

(சிவராசா புவனேந்திரன்)

நாட்டு இன்ற கொடிய பிணி
வறுமையிலும் தன் மானம்
பெரிதாமென்று
பூட்டுடைத்து விடுதலை நாள்
கொண்டு வரப் புறப்பட டீர்:
பூரிக்கின்றோம் நாம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கும்

---

## நினைவு கூருகின்றோம் ...

## 1992-06-28

1987 ஆம் ஆண்டு இதே தினத்தில் திருக்கோணமலை / மூதூர், கூனித்தீவுப் பகுதியில் எமது முகாமொன்றின் மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய -

**லெப். சுதர்சன்** [பூபாலபிள்ளை சிவகுருநாதன் - ஆரையம்பதி - 01, மட்டக்களப்பு.]

**2-ம் லெப். கோபி** [நாகமணி ஆனந்தராசா - ஆரையம்பதி - 01, மட்டக்களப்பு.]

**மேஜர் கஜேந்திரன்** [சிங்காரவேல் சசிதரன் - 14, வித்தியாலய வீதி, திருக்கோணமலை.]

**கப்டன் சிறி குளியா** [அப்புசாமி அன்பரசு - அரசடி வீதி, திருக்கோணமலை.]

**கப்டன் முத்துசாமி** [குமாரசூரியர் முரளிதரன் - களுவாஞ்சிக்குடி, மட்டக்களப்பு.]

**லெப். சுரேஸ்** (தங்கராசா இளங்கோ - ஆலங்கேணி, கிண்ணியா, திருக்கோணமலை.)

**லொயிட்** (இருதயநாதன் யோகநாதன் - கோயில்வீதி, மூதூர், திருக்கோணமலை.)

**தாகூர்** [கஜேந்திரன் - வல்வெட்டித்துறை]

**நிமால்** (செல்லையா நற்குணராசா - கட்டைபறிச்சான், திருக்கோணமலை.)

இதே முற்றுகையின்போது சிறிலங்காப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட 9 தமிழர்கள்.

திருக்கோணமலை கூனித்தீவுப் பகுதியை முற்றுகையிட்ட சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட நாட்டுப் பற்றாளரான

**கந்தையா ஏகாம்பரம்** [கூனித்தீவு, திருமலை.]

1988 ஆம் ஆண்டு மட்டக்களப்பு 40-ம் கிராமம், பகுதியில் தேசவிரோத சக்திகளினால் கொலை செய்யப்பட்ட

**குரு** [சித்திரவேல் சத்தியநாதன் - பக்கியெல்ல, 37-ம் கிராமம், மட்டக்களப்பு ]

1989 ஆம் ஆண்டு மிருசுவில் பழைய வாய்க்கால் பகுதியில் தேசவிரோத சக்திகள் மீதான தாக்குதலில் வீரச்சாவெய்திய -

**கப்டன் குட்டி அக்பர்** (அருளம்பலம் குகசீலன் - மட்டுவில் தெற்கு)

மயிலிட்டியில் தேசவிரோத சக்திகளினால் சித்திரவதை செய்யப்பட்டு வெட்டிக் கொல்லப்பட்ட நாட்டுப் பற்றாளரான -

**செல்வம் அக்கா** (மயிலிட்டி)

புலோலி கந்தமுருகேசனார் சிலை அருகில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பெண், மற்றும் கொக்குவில் கிழக்கு, நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய வீதியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கோப்பாய் உதவி அரசாங்க அதிபர், ஆலய அர்ச்சகர் உட்பட 3 தமிழர்கள்.

1990ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

**உமாகாந்** (கனகலிங்கம் நவரட்ணராஜா - (ஜொன்) டச்சு வீதி, சாவகச்சேரி)

பலாலியில், சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில வீரச்சாவெய்திய-

**குமரன்** (சுப்பையா கனகராஜ் - உடங்கல், நெடுங்கேணி, மணலாறு)

திருமதி த. நாகராசா தலை
மையில் கடந்தவியாழனன்று நடைபெற்றது.

இக்கலந்துரையாடல் 6 ஆம் 7 ஆம், 8ஆம் ஆண்டு மாணவிகளின் பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் இடையில் நடைபெற்றது. இதன் போது ஒவ்வொரு மாணவியினதும் கல்வி மேம்பாடு ஒழுக்கம் பற்றி ஒவ்வொரு பாடத்தையும் கற்பிக்கும் ஆசிரியர்கள் மூலம் பெற்றோருக்கு தெரிவிக்கப்பட்டது. இதனைக்பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் வளர்ச்சியில் எவ்வாறு ஊக்கமளிப்பது என்பது போன்ற விடயங்களை அறிய முடிந்தது.

## சூழல் தொடர்பான போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

சூழலைப் பாதுகாத்தல் சம்பந்தமாக ஒவ்வொருஉதவிஅரசஅதிபர்பிரிவுகள் ரீதியாகவும் மாவட்ட ரீதியாகவும் போட்டிகள் நடாத்த யாழ் செயலகம் முடிவு செய்துள்ளது. இப் போட்டிகள் மாணவர்கள் மற்றும் ஆர்வமுள்ள பொதுமக்களிற்கும் இடையில் கருத்துரை. கட்டுரை பேச்சு, நாடகம்,பொது அறிவு என்பனவற்றில் நடாத்தப்படும்.

மேற்படி நிகழ்வு சம்பந்தமாக நடந்த வியாழன் யாழ் செயலகத்தில் யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இப்போட்டிகள் சம்பந்தமான சகல விபரங்களும் பின்னர் பத்திரிகைகள் மூலம் பிரசுரிக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது. [பா]

## பதவிக்காலம் நீடிப்பு

(கொழும்பு)

சிறிலங்கா பொலிஸ் மாஅதிபர் ஏர்ணஸ் பெரேராவின் பதவிக்காலம் மேலும் ஒருவருடத்திற்கு நீடிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

புலிகளின தாகம் தமிழீழத் தாயகம்

(2721)

---

# 1-ம் ஆண்டு நினைவஞ்சலி



### வீரவேங்கை கரிகரன்

(வடிவேல் இன்பராசா)

முள்ளிப்பொத்தானை திருக்கோணமலை

வீரஜனனம் 1971-06-22 — வீரச்சாவு 1991-06 28

இளவயதில் இன்பத்தை இறுதிவரை ஏற்காமல்
பாசத்தை மறந்து பாசறைக்கு போனாயே
போராடப் புறப்பட்ட கரிகரா
மண்மீட்பின் வேளையிலே செங்குருதி தானிழந்து
இம் மண்ணை சிவப்பாக்கி மாவீரன் வரிசையிலே
சேர்ந்து விட்டாய் சூான் கல்வில்
போராட்ட வேளையிலே தமிழீழதேச மக்கலெல்லாம்
எம்பணியை ஆற்றிடப் புறப்படுவோம் பாசறைக்கு
துப்பாக்கி தனை ஏந்தி ஒரு தளத்தை அமைப்பதற்கு
பல களங்கள் காணுகின்ற வேங்கையுடன் தான்
இணைந்து

கரிகரன் அவன் நடந்தான்
பாதமதை நாம் தொடர்ந்து
ஈழத்தை மீட்டிடவே
புறப்படுவோம் களத்திற்கு

- குடும்பத்தினர்

(சி/4613)

---

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

வேலணை தெற்கு
வேலணை. 28- 6- 92

அன்னாரின் குடும்பத்தவர்

[சி/4614[

---

## 16ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



### வீரவேங்கை நல்லையா

(விஜயறஞ்சன்)

வீரஜெனனம் 1977. 7. 13 — வீரச்சாவு 1992. 6. 13

சொல் செயல் சிந்தை எல்லாம் தமிழாக
இனம் வாழ மண்மீட்கப் போராடப் புறப்பட்ட
இளம் வேங்கை விஜயறஞ்சன் என்றும்
பதினாறாய் நின்றான் புகழோடு நிலைத்து

அன்னாரின் மரணச் சடங்கில் பங்குபற்றிய அனைவருக்கும் எமதுநன்றியை தெரிவிப்பதுடன் இன்று28. 6 92ல் நடைபெற உள்ள வீட்டுக்கிருத்தியத்தில் சகபோராளிகள் அனைவரையும் பங்கு பற்றுமாறு மிகபணிவன்புடன் வேண்டுகின்றோம்.

கிருஸ்ணன்கோவிலடி,
பொன்னாலை
சுழிபுரம்.

உமது பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

(2725)

---

**குமரன்** (சுப்பையா கனகராஜ் - உடங்கல், நெடுங்கேணி, மணலாறு)

**தம்பி** (சிவசா சிவப்பிரகாசசுந்தரம் - பிள்ளையார் கோயிலடி மயிலிட்டி)

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**லெப். செந்தில் / மகேசன்** (சரவணன் மதனராசா - இரணை இலுப்பைக்குளம் வவுனியா)

**நித்திலன்** (சண்முகம் தேவகுமார்- 'முத்துமாளிகை' புளியங்குளம் வவுனியா)

வவுனியா - மன்னார் வீதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய -

**இன்பன்** (கனகு செல்வராசா - 1ஆம் படிவம், இராசேந்திரன்குளம், வவுனியா)

அம்பாறை அறுகம்பை முகாமில் வைத்து சிறிலங்கா படையினரால் ரயர் போட்டு எரித்துக்கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

தமிழீழக் கடற்பரப்பில் ( மணலாறு - கொக்கிளாய்] படகில் செல்கையில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 5 தமிழர்கள்

புன்னாலைக்கட்டுவனில் பாரவண்டி ஒன்றின் மீது சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட உலங்கு வானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட 4 மாதக் குழந்தை

1991ஆம் ஆண்டு திருக்கோணமலை / தம்பலகமம் சூரங்கல் பகுதியில் சிறிலங்காப படையினர் பதுங்கிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய-

**ஹரிகரன்** (வடிவேல் இன்பராசா - முள்ளிப்பொத்தானை, தம்பலகமம், திருக்கோணமலை)

**ராஜ்குமார்** (அருணாசலம் சிவராசா - 3ஆம் வட்டாரம், ஆலங்கேணி, திருக்கோணமலை)

**சந்திரசேகரம்** (தெய்வேந்திரம் யோகன்-வெருகல் மூதூர், திருக்கோணமலை)

வவுனியா, பேயாடி கூழாங்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில் வீரச்சாவெய்திய-

**கப்டன் வதனன்** [கந்தசாமி ராமச்சந்திரன்-4ஆம் படிவம், பாவற்குளம், வவுனியா)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(இ/4608)

### சிந்தனைக்கு

ஆற்றல் வாய்ந்த மனிதர்கள் தண்டிக்கப்படும் போது, அவர்களுடைய அதிகாரம் பரவுகின்றது.

-டேஸிட்டஸ்-

ஈழநாதம்

51, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 28-06-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் 2808
த. பெ. எண் 65

## நிதானம் தேவை

யாழ். நகரப்பகுதியில் இருந்தும், தென்மராட்சிப் பகுதியில் இருந்தும் மக்களை வெளியேறுமாறு நேற்று காலை பலாலி இராணுவ முகாமிலிருந்து நடத்தப்படும் 'யாழ்ப்பாண வானொலியில்' தொடர்ச்சியாக ஒலிபரப்பியதை அடுத்து மக்கள் மத்தியில் பதற்றம் உருவாகியது. சில பகுதிகளில் இருந்து மக்கள் வெளியேறவும் தொடங்கினர்.

ஊரடங்குச் சட்டமும், போர் எச்சரிக்கைகளும் திடீரென மேற்கொள்ளப்படும் தாக்குதல் நடவடிக்கைகளும் தமிழ் மக்களுக்குப் புதியவையல்ல. சிறிலங்கா இராணுவம் தற்பொழுது கடைப்பிடித்துவரும் புதிய தந்திரோபாயத்தின் தாக்குதல் எவ்வேளையில் எங்கும் ஆரம்பிக்கப்படலாம். அதேவேளை ஊரடங்குச் சட்டம் போட்டுவிட்டால் திட்டவட்டமாகத் தாக்குதல் நடைபெறும் என்றோ, அல்லது ஊரடங்குச் சட்டம் அமுலில் இல்லை என்பதற்காகத் தாக்குதல் நடத்தப்பட மாட்டாது என்பதற்கோ எந்தவித உத்தரவாதமும் இல்லை.

இந்நிலையில் சிறிலங்கா இராணுவத்தின் வானொலி வெளியிடுகின்ற அறிவிப்புக் குறித்தும் மக்கள் நிதானமாகச் சிந்தித்தே முடிவுக்கு வரவேண்டும். ஏனெனில் சிறிலங்கா இராணுவத் தரப்பு கடந்த காலத்தில் இதைப் போன்ற பல அறிவிப்புக்களை வெளியிட்டு உள்ளது. இதில் சிலவற்றின்போது தாக்குதல் நடைபெற்றன, மக்களுக்கு இழப்புக்களும் ஏற்பட்டுள்ளன. பலவற்றின்போது தாக்குதல்கள் இடம் பெறவில்லை.

கடந்த காலத்திலும் சிறிலங்கா வானொலி பல பிரமிக்கத்தக்கதும் மக்களை குழப்பத்தில் ஆழ்த்துவதுமான பல செய்திகளை வெளியிட்டிருந்தது. யாழ். கோட்டை இராணுவ முகாமிற்குள் முற்றுகையினுள் சிக்கியிருந்த இராணுவத்தினரை மீட்கமண்டதீவில் இருந்து புறப்பட்ட இராணுவத்தினர் பாரிய இழப்புக்களுடன் பின்வாங்கி ஓடிக்கொண்டிருந்தபோது, சிறிலங்கா வானொலியோ யாழ்நகரைக் கைப்பற்றிய இராணுவம் கச்சேரி நோக்கி முன்னேறிக் கொண்டிருப்பதாக அறிவித்தது.

இதே போன்றே, இவ்வருட ஆரம்பத்தில் வடமராட்சியில் இருந்து மக்களை வெளியேறுமாறுவானொலி மூலம் தொடர்ந்து அறிவித்தல்களை சிறிலங்கா இராணுவம் வெளியிட்ட வண்ணம் இருந்தது. மக்களும் வெளியேறினர். ஆனால் தாக்குதல்கள் எவையும் இடம்பெறவில்லை.

# தென். ஆபிரிக்க அரசியல் சூழ்நிலையை தலைகீழாக்கிய 'போய் பதாங்' படுகொலைகள்

எவரும் சற்றும் எதிர்பாராத வகையில் தென் ஆபிரிக்காவின் அரசியல் அரங்கில் ஏற்பட்ட திடீர் திருப்பங்கள் ஒரு முட்டுக்கட்டை நிலையை ஏற்படுத்தியுள்ளது. கடந்த இருபத்தொன்பது மாதங்களுக்கு முன்பாக ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தலைவரான டாக்டர் நெல்சன் மண்டேலா விடுதலை செய்யப்பட்டதையும், ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் மற்றும் இனவாத எதிர்ப்பு இயக்கங்கள் மீதான தடைச் சட்டங்கள் நீக்கப்பட்டதையும், தொடர்ந்து இதுகால வரையில் எட்டப்பட்ட அரசியல் முன்னேற்றங்களும், சீர்திருத்தங்களும் திடீரென காணாமற் போய்விட்டது போன்றதொரு நிலைமை ஏற்பட்டுள்ளது.

இனச்சார்பற்ற- ஜனநாயக ரீதியான புதிய தென் ஆபிரிக்காவை அமைப்பதற்காக இருந்த உள்நாட்டு அரசியல் சூழல் தற்போது அற்றுப்போயிருப்பதுடன், எதிர்காலம் குறித்தும் நிச்சயமற்றதான ஒருநிலையே காணப்படுகின்றது. மேலும் தென் ஆபிரிக்காவில் நிலை கொண்டுள்ள மேற்குநாட்டு பத்திரிகையாளர்கள் மற்றும் தகவல் சேகரிப்பாளர்கள் ஒரு உள்நாட்டுப்போர் ஒன்று ஏற்படும் அபாயம் பற்றிப் பேசிக்கொள்கின்றனர்.

இவை அனைத்தும் கடந்த பதினேழாம் திகதி இடம்பெற்ற படுகொலைச் சம்பவங்களை தொடர்ந்து ஏற்பட்ட விளைவுகள். தென் ஆபிரிக்காவின் தலைநகர் ஜொகான்ஸ்பேர்க் நகருக்கு சமீபமாகவுள்ள போய்பதாங் நகரை அண்டிய பகுதிகளில் அமைதியான முறையில் தூங்கிக் கொண்டிருந்த ஆண்களும், பெண்களும், சிறுவர்களுமாக பலரும் கொல்லப்பட்டனர். இச் சம்பவத்தில் உயிரிழந்தவர் எண்ணிக்கை முப்பதிலிருந்து நாற்பத்தி ஐந்துவரை உயர்ந்துவிட்டது. இதற்குப் பின்னர் தென் ஆபிரிக்காவின் நிலைமைகளில் கொந்தளிப்புக்கள் மீண்டும் உருவெடுத்துள்ளன.

'போய்பதாங்' படுகொலைச் சம்பவங்கள் பற்றி பல்வேறு நாடுகளும் கண்டனம் தெரிவித்து கருத்துக்களை வெளியிட்டுள்ளன. அதிர்ச்சி, ஆச்சரியம், மற்றும் கோபம் என்பவற்றை வெளிக்காட்டும் கருத்துக்களை இக்கண்டனக் கணைகளை வெளியிட்ட அரசுகள் குறிப்பிட்டு இருந்தன. மார்ச் 1960இல் தென் ஆபிரிக்காவில் இடம் பெற்ற படுகொலைகளுக்குப் பின்னர் மிகுந்த அரசியல் கொந்தளிப்பை இது ஏற்படுத்தியுள்ளது.

மறக்க முடியாத வகையில் இந்தப் படுகொலைச் சம்பவங்களால் அரசியல் லாபம் அடைந்தவர் யாராவது இருக்கிறார்களா எனக் கேட்டால் இன்கதா சுதந்திரக் கட்சியின் தலைவர் திரு புத்தலேசி என்பவரைச் சுட்டிக் காட்ட முடியும். தற்போதைய அமைப்பின் பிரகாரம் சூலு மக்களின் தாயகப் பிரதேசங்களின் முதலமைச்சராக விளங்கும் திரு. புத்தலேசியின் மறைவான கரங்கள் இப்படுகொலையின் பின்னணியில் இருப்பதாக நம்பப்படுகின்றது.

'போய்பதாங்' நகருக்கு சமீபமாகவுள்ள ஆண்கள் தங்குமிடம் ஒன்றில் தங்கியிருந்த சூலு தொழிலாளர்கள் சிலரே இப்படுகொலையை நடத்தியதாகவும், பலரும் எதிர்பார்த்தது போலவே டாக்டர் மண்டேலாவின் பதிலுக்கு பொலிசார் காத்திருந்ததாகவும் சொல்லப்படுகின்றது. எனினும் போய்பதாங் படுகொலைகளுக்கும் அசம்பாவிதங்களுக்கும் தென் ஆபிரிக்காவின் அரசை டாக்டர் நெல்சன் மண்டேலா குற்றஞ்சாட்டியது ஆச்சரியப்படத்தக்கதல்ல. இதைத் தொடர்ந்து ஜனநாயக பூர்வமாக தென் ஆபிரிக்க அரசுடன் நடத்தப்பட்ட பேச்சுக்களை ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் ஒருதலைப் பட்சமாக ரத்துச் செய்தது. அவநம்பிக்கையும், வன்மமும் வளர்ந்திருந்த இந்தச் சூழ்நிலையில் தான் அரசியலமைப்பு வரைவதற்காக அரசுக்கும், காங்கிரசுக்குமிடையே நடத்தப்பட்ட பேச்சுக்களின் முன்னேற்றம் தடைப்பட்டது.

> தென் ஆபிரிக்காவின் தற்போதைய நிலைமைகள் குறித்து இந்தியப் பத்திரிகையாளரான ஹரி ஆண் சோப்ரா எழுதிய ஆய்வுரைக் கண்ணோட்டத்தின் மொழியாக்கம்.

இதனால் போய்பதாங் தென் ஆபிரிக்காவின் சிக்கல் மிகுந்த அரசியலில் ஒரு முக்கிய திருப்பு முனையாகி விட்டது. டாக்டர் நெல்சன் மண்டேலாவும், தென் ஆபிரிக்க அதிபர் டி. கிளார்க்கும் நெருங்கிப் பணியாற்றி ஒரு புதிய தென்னாபிரிக்காவைக் கட்டியெழுப்புவதற்கு கொண்டிருந்த நம்பிக்கையைத் தகர்க்கும் விதத்தில் ஒரு புறத்திலும் சம்பவங்கள் இடம் பெறுவதாகத் தெரிகிறது.

எது எப்படியாயினும் இந்த வன்முறைச் சம்பவங்கள் அரசியல் நோக்கம் கொண்டவை என்பது தெளிவு. இனவெறி கொண்டு செயற்படும் இன்கதாவினால் வழிநடத்தப் படுவோரும், இனவெறிக்கு எதிராக இணக்கத்தைக் காண விளையும் ஆபிரிக்க தேசிய காங்கிரசினால் வழிநடத்தப் படுவோருக்கும் இடையிலான மோதலாக இது நீடிக்கின்றது. இன்கதாவின் தலைவரும் கறுப்பு மக்களிடம் செல்வாக்குடையவருமான திரு. புத்தலேசி, டாக்டர் மண்டேலாவுக்கும் அதிபர் டி கிளார்க்குக்கும் இடையே உறவுகள் பலமடைவதையிட்டுக் கவலை கொண்டிருந்ததாகவும் கூறப்படுகின்றது. இதனால் தமது அரசியல் தளத்தை உறுதிப் படுத்திக் கொள்வதற்கு கொலைகாரர்களைப் பயன் படுத்தினார் என்றும், இது கறுப்பர்களிடையே பிளவுகளை ஆழப்படுத்தியுள்ளதாகவும் தெரிய வருகின்றது. ஆனால் ஆபிரிக்க தேசிய காங்கிரஸ் தென் ஆபிரிக்காவில் வெள்ளையின சிறுபான்மை அரசுக்கெதிராக பெரியளவில் மக்கள் போராட்டங்களை ஆரம்பித்ததற்கு மறுநாள் ''போய்பதாங் படுகொலைகள்'' நடத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

இதனிடையே 'போய்பதாங்' அசம்பாவிதங்களுக்குப் பின்னர் சர்வதேச விளையாட்டு அரங்குகளில் தென் ஆபிரிக்காவிற்கு மீண்டும் தடைவிதிக்கப்படுமா என்ற கேள்வியும் எழுந்துள்ளது. தென் ஆபிரிக்காவின் இன்றைய அரசியல் நிலவரங்கள் அது விளையாட்டுக்களில் ஈடுபடுவதற்கு சாதகமாக இல்லை என்று ஆபிரிக்க தேசிய காங்கிரசின் விளையாட்டுச் செயலாளர் கூறியுள்ளார்.

தென் ஆபிரிக்காவில் புதியதாக ஒழுங்கமைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களில் ஆபிரிக்க தேசிய காங்கிரசின் செல்வாக்கு கணிசமானது என்பது இங்கு ஊன்றிக் குறிக்கப்பட வேண்டியதாகும்.

எனவே தான் அடுத்த மாதங்களில் இடம்பெறும் பாசிலோனா ஒலிம்பிக் விளையாட்டுக்களில் தென் ஆபிரிக்கா கலந்து கொள்ளுமா. என்பது இப்போது கேள்வியாகியுள்ளது.

## இசைமேதைசந்தானத்திற்கு நுண்கலைப் பீடம் அஞ்சலி

(மருதனார்மடம்)

பாரம்பரிய கர்நாடக இசையை யாழ்ப்பாணத்து மக்களுக்குத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற அவாவுடனேயே திரு. நடேசன் அவர்கள் மஹாராஜபுரம் விஸ்வநாதையர் அவர்களை முதல்வராகக் கொண்டு இந்த இராமநாதன் மியூசிக் அக்கடமியை ஆரம்பித்தார். விஸ்வநாதையருக்கு பின்னால் அவரது மகனான சந்தானம் இராமநாதன் அக்கடமியின் அதிபராக ஐந்து ஆண்டுகள் சேவையாற்றி பல இசைக்கலைஞர்களை யாழ்ப்

இராமநாதன் நுண்கலைப்பீட ஆசிரியர்களினலும் மாணவர்களினாலும் ஒழுங்குசெய்யப்பட்ட அஞ்சலிக்கூட்டத்தில் இரங்கல் உரையாற்றிய வீரமணி ஐயர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது இனிய நளினமான குரல் பாவம், விஸ்தாரமான மனோதர்மம் உருப்படி சம்பிரதாயம் போன்ற சகல அம்சங்களும் நிறைந்த ஒரு பாடகனை இழந்து விட்டது எனத் தெரிவித்தார்.

அன்னாரின் மறைவையொ

### அமெரிக்காவில்

## மனித உரிமை மீறல் பற்றி மன்னிப்புச் சபை கண்டனம்

[லொஸ் ஏஞ்சல்ஸ்]

அமெரிக்காவில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் குறித்து சர்வதேச மன்னிப்புச் சபை தனது அறிக்கையொன்றில் கண்டனம் தெரிவித்துள்ளது. இவ் அமைப்பின் தலைவர் ஏ. என். மாட்டின் லொஸ் ஏஞ்சல்சில் நிருபர்களிடம் பேசும்போது ஏனைய நாடுகளில் நடைபெறும் மனித உரிமை மீறல்கள் குறித்துக் கவலை தெரிவிக்கும் அமெரிக்கா தனது உள்நாட்டு விவகாரங்களில் மனித உரிமைகளை மீறுவது அதிகமாகி இருப்பதாகத் தெரிவித்தார். ஆசியாவிலிருந்து வரும் அகதிகளின் விடயத்தில் இறந்தோர் தொகையும், அவர்கள் பொலிசாரின் அடாவடித்தனங்களும் இதற்குப் போதிய சான்றுகளாகும் எனவும் குறிப்பிட்டார்.

### ஒரு வருடத்தினுள்

வெளியேறினர்கள். ஆனால் தாக்குதல்கள் எவையும் இடம்பெறவில்லை.

இதேவேளை கடந்த வருட ஆரம்பத்தில் மக்களை வெளியேறத் தூண்டுப்பிரசுரம்வீசிய அரைமணி நேரத்திற்குள் வல்வெட்டித்துறை மீது பாரிய விமானத்தாக்குதல் ஒன்றைச் சிறிலங்கா விமானப்படை தொடர்ச்சியாக மூன்று நாட்கள் மேற்கொண்டது உண்டு. இதனால் பாரிய உயிரிழப்புகளும் பொருளிழப்புக்களும் ஏற்பட்டதும் உண்டு. இவ்வாறு ஊரடங்கு அறிவித்துவிட்டு சில தாக்குதல்கள் இடம் பெற்றதுமுண்டு.

சிறிலங்கா இராணுவத்தின் இவ்வாறான குழப்பகரமான தந்திரோபாயத்தின் முக்கியமான நோக்கம் தமிழ் மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தி அவர்களின் மனோவலிமையைச் சிதறடிப்பதாகும். இது தனியாக சிறிலங்கா இராணுவத்தினதோ அன்றி சிறிலங்கா அரசாங்கத்தினதோ புதிய தந்திரோபாயமல்ல. காலாகாலமாக யுத்தத்தில் ஈடுபடுவர்கள் இவ்வாறே செய்து வந்தார்கள். ஹிட்லரின் உதவியாளனான கோயல்ஸ்சும் இதைத்தான் செய்தான். வளைகுடாப்போருக்கு தலைமை தாங்கி நடத்திய பென்டகனும் அமெரிக்கா பாதுகாப்புதுறை - இதைத்தான் செய்தது. இதே போன்று வடக்கு - கிழக்கில் யுத்தத்தில் ஈடுபட்ட இந்திய அமைதிகாக்கும் படையும் இதையே செய்தது சிறிலங்கா இராணுவமும் இதையே செய்தது / செய்கிறது.

அதாவது. இது மக்கள் தொடர்பு சாதனங்களை தமது கட்டுப்பாட்டுகளில் வைத்திருப்பவர்கள் எதிரியின் மனோதிடத்தையும், மக்களின் மனோதிடத்தையும் சிதறடிப்பதற்காக மேற்கொள்ளும் வழமையான நடைமுறையாகும். இந்நிலையில், இதைக்கண்டு மக்கள் பதற்றம் அடைவதோ அன்றி குழப்பமடைவதோ கூடாது. எதனையும் நிதானமாகவும், ஆறுதலாகவும் சிந்தித்து முடிவுகளை மேற்கொள்ளவேண்டும். எங்களது எதிரி காட்டுமிராண்டித்தனமானவன்தான் அதற்காக நாங்கள் புத்திசாலித்தனமற்றும், பதற்றத்துடனும் நடவடிக்கைகளை மேற்கொள்வதினால் இலாபம் எதுவும் ஏற்படப்போவதில்லை.

---

## தமிழ்நாடு அரசு

# தடா கைதிகளை மோசமாக நடத்துகிறது

ஜெயலலிதா அரசு தி.மு.கழகவைப் பழிவாங்கும் எண்ணத்துடன் தடா கைதிகளைக் கொடுமையான முறையில் நடத்துகிறது. எனவே அறப் போராட்டத்திற்குத் தி.மு.க. தொண்டர்கள் தயாராக இருக்க வேண்டும்என்று அதன் தலைவர் மு. கருணாநிதி அழைப்பு விடுத்துள்ளார்.

---

கடமியின் அதிபராக ஐந்து ஆண்டுகள் சேவையாற்றி பல இசைக்கலைஞர்களை யாழ்ப்பாணத்தில் உருவாக்குவதற்கு அவர் செய்தசேவையை மறக்கமுடியாது. பாரம்பரிய கர்நாடக சங்கீத மகிமையை யாழ் மக்கள் மத்தியில் பரப்பிய பெருமை திரு.சந்தானம் அவர்களையே சாரும்.

இவ்வாறு பஹாரா ஜபுரம் சந்தானம் அவர்களின் மறைவையொட்டி நேற்று முன்தினம் இழந்து விட்டது எனத் தெரிவித்தார்.

அன்னாரின் மறைவையொட்டி இராமநாதன் நுண்கலைப் பீட மாணவர்கள் நேற்று விரிவுரைகள் யாவற்றையும் நிறுத்தி அன்னாருக்கு அஞ்சலி செலுத்தினர். மேற்படி அஞ்சலிக் கூட்ட ஆரம்பத்தில் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக மூன்று நிமிட நேர மௌனம் அனுஷ்டிக்கப்பட்டது.

# காவி உடை தரித்தோர் வவுனியாவில் கைது

(வவுனியா)

காவி உடை தரித்து சாமி வேடத்தில் நடமாடிய இருவர் வவுனியாவில் வைத்து சிறிலங்கா பொலிசாரினால் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்ட போது பல மோசடிகள் அம்பலத்திற்கு வந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர். பலரிடம் இவர்கள் பணமோசடியில் சம்பந்தப்பட்டவர்கள் என்றும் பொலிசார் கூறினர்.

கிளிநொச்சியைச் சேர்ந்த இவ் விருவரும் போலிச்சாமி வேடத்தில் வவுனியாவில் நடமாடினர். விசாரணைக்கு வவுனியா பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு இவர்களின் பொதிகள் சோதனை செய்யப்பட்ட போது 56ஆயிரம் ரூபா ரொக்கப் பணம் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இவ்விருவரும் தொடர்ந்து விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

# அரசியல் கொலைகள் பற்றி விசாரணை நடத்துக

## - அன்னையர் முன்னணி

(கொழும்பு)

அன்னையர் முன்னணி, 1988 முதல் நிகழ்ந்த அரசியல் கொலைகள் மற்றும் காணாமற் போனவர்கள் பற்றிய விசாரணையை அரசு மேற்கொள்ளவேண்டும் என்று விரும்புவதாக மாத்தறை மாவட்ட சுதந்திரக் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்த சமரவீர தெரிவித்துள்ளார்

11 ஜனவரி, 1991க்குப்பிறகு நிகழ்ந்த அரசியல்கொலைகள் காணமற்போனவர்கள் பற்றி விசாரிக்க ஆணைக்குழுவினை நியமித்த ஜனாதிபதி பிரேமதாஸா 1988ஆம் ஆண்டுமுதல் விசாரணை மேற்கொள்ள ஆணைக்குழுவைப் பணித்திருக்க வேண்டும் என்றார் அவர்.

அரசின் உத்தரவின் பேரில் பல கொலைகள் நடந்திருப்பதாக அரசைச்சாரும் அன்னையர் முன்னணி 1988-1989 காலப்பகுதியில் பல அரசியல் கொலைகள் நிகழ்ந்ததுடன் பெரும்தொகையான இளைஞர்கள் காணாமற் போயுள்ளார்கள் என்றும் தெரிவித்துள்ளது.

---

ஒரு வருடத்தினுள்

# பாலஸ்தீனியரோடுசுயாட்சிஒப்பந்தம் இஸ்ரேலின் புதிய பிரதமர் அறிவிப்பு

(டெல்அவிவ்)

ஒரு வருட காலத்தினுள் பாலஸ்தீனியர்களுடன் சுயாட்சி ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்படும் என்று இஸ்ரேலின் புதிய பிரதமர் யிட்சாக் ராபின் கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில் பாதுகாப்பு, வெளிவிவகாரம், யூதர்குடியேற்றங்கள் என்பன தவிர்ந்த அன்றாட விவகாரங்கள் அனைத்தையும் பாலஸ்தீன மக்கள் தாமாகவே கவனித்துக் கொள்ள கூடிய வகையில் சுயாட்சிக் கோட்பாட்டை ஆதரிப்பதாகவும் தெரிவித்தார்.

ஆக்கிரமிக்கப்பட்ட ஜோர்தான் நதியின் மேற்குக் கரையிலும் காஸா முனையிலும் வாழும் பாலஸ்தீனமக்கள் நிர்வாக அமைப்பு ஒன்றிற்கு தமது பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் முகமாக தேர்தல் ஒன்று நடத்தப்படுமென்றும், மத்திய கிழக்கு சமாதான பேச்சுக்களின் வரம்புக்குள் இது தொடர்பாகவும் பேச்சுக்கள் இடம்பெறுமெனவும் குறிப்பிட்டார்.

# தீவிபத்தில் ஐவர் பலி

(சென்னை)

தர்மபுரி மாவட்டம் கிருஷ்ணகிரியில் நேற்று முன்தினம் காலைஇடம்பெற்ற தீ விபத்தில் மூன்று குழந்தைகள் உட்பட ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர் என தர்மபுரி பொலிசார் தெரிவித்துள்ளனர்.

வீடொன்றினுள்மண்ணெண்ணை விளக்கால தீ பிடித்துக்கொண்டதாவும் இதனால் அந்த வீட்டிலிருந்தவர்கள் உயிர் இழந்ததாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

---

சான்றுகளாகும் எனவும் குறிப்பிட்டார்.

## பாரதீய ஜனதாக்கட்சி

# ராஜ்யசபாத் தேர்தலில் 10 இடங்களை பெற்றது

(டில்லி)

இந்தியப் பாராளுமன்றத்தின் மேலவையான ராஜ்யசபாவின் இருபத்திரண்டு இடங்களுக்கு நடைபெற்ற தேர்தல்களில் பாரதிய ஜனதாக் கட்சி பத்து இடங்களை வென்றுள்ளது.

உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான், மகாராஷ்டிரா ஆகிய மாநிலங்களிலிருந்து இருபத்திரண்டுபேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இவர்களில்பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர் டாக்டர் முரளி மனோகர் ஜோஷி அக்கட்சியின்துணைத் தலைவர் சுந்தர்சிங் பண்டாரி, ராஜீவ் சபையின்தற்போதைய துணைத் தலைவர் நஜ்மா ஹெப்துல்லா, அகில பாரத காங்கிரஸ் (ஐ) கமிட்டியின் பொதுச்செயலாளர் சுசில் குமார் சிண்டே, முன்னாள் மத்திய அமைச்சர் முக்தி மொகமட்சயீட், ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்.

இத்தேர்தல்களில் பாரதீய ஜனதா பத்து இடங்களையும் காங்கிரஸ் (ஐ) கட்சி ஆறு இடங்களையும், ஜனதா தள் இரண்டு இடங்களையும், சமஜ்வாதி ஜனதாக் கட்சி ஜனதாதள் (ஏ) சிவசேனை மற்றும் சுயேட்சை என்பன தலா ஒவ்வொரு இடங்களையும் வென்றுள்ளன.

## இந்தியாவிலுள்ள

# தீன்பிகா பாதை குத்தகைக்கு விடப்பட்டது

மேற்கு வங்காளத்தில் உள்ள தீன்பிகா பாதை நேற்று முன்தினம் பங்களாதேஷிற்கு 999 வருட குத்தகைக்கு வழங்கப்பட்டது. இந்தியாவிற்கும் பங்களாதேஷிற்கும் இடையே 1974 ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி இது நடைபெற்றது.

இந்த 187 கிலோமீற்றர் நீளமுள்ள பாதை நிர்வாக மாற்றம் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இரு நாடுகளைச் சேர்ந்த அதிகாரிகளும் இப்பாதை வழியாக நேற்றுச் சென்றனர்.

இதேவேளை இந்தப் பாதையை குத்தகைக்கு விடுவதை ஆட்சேபித்து நேற்று முன்தினம் மேற்கு வங்காளத்தில் முழுநேர ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

ஈழநாதம்

# புற்றுநோய் அதிகரிப்பிற்கு குண்டு வீச்சு காரணம்

-பேராசிரியர் கணேசலிங்கம்

யாழ்ப்பாண மாவட்டத்திலும், வடக்கு-கிழக்கின் ஏனைய பகுதிகளிலும் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் புற்றுநோய்க்கு இராணுவ நடவடிக்கைகளின் போது வீசப்படும் குண்டுகளில் இருந்து வெளியாகும் இரசாயன சேர்க்கைகள் தான் பெருமளவுக்கு காரணமாகும் என அண்மையில் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.

இக்கருத்தரங்கில் பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கம் உரை நிகழ்த்தும் போது வீடுகளுக்கு மேல் குண்டுகள் வீசப்பட்டு அவை எரியும் போது பல பொருள்கள் பொசுங்குவதனால் அவற்றில் உள்ள இரசாயன வாயுக்கள் காற்றுடன் கலப்பதனால் சூழல் மாசடைகின்றன. குண்டுச் சத்தத்தினால் காது செவிடாகிப் போவதும் பலவித பாதிப்புகளும் ஏற்படுகின்றன.

குண்டுகளினால் மனிதனின் சூழல் மாசடைகிறது என்பதை முதலாம் உலக மகாயுத்தம் உலகுக்கு எடுத்துக் காட்டியது மக்கள் பயங்கரமான நோய்களுக்கு ஆளாகினர். கண்களும் குருடாகின. வைரஸ் போன்ற கிருமிகளை போர்க் காலங்களில் எதிரிகள் மீது பரவவிட்டால் அதனால் ஏற்படும் விளைவுகளை ஹெலி, குண்டு வீச்சு விமானங்கள் ஆகியவற்றினால் ஏற்படும் சேதங்களுக்கு ஒப்பிடலாம் என்றும் பேராசிரியர் குறிப்பிட்டார்.

## வெளிவாரிப் பட்டப்படிப்பு ஆலோசனை வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் பகுதியினர் வெளிவாரிப் பட்டப்படிப்பை மேற்கொள்ள விரும்புவர்களுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கி வருகின்றனர்

தேவையான தகைமைகள் நெகிழ்ச்சித்தன்மை கொண்டவையாக இருப்பதால் இக் கற்கைநெறியைப் பின்பற்ற விரும்புபவர்கள் தமக்கு வேண்டிய ஆலோசனைகளைப் பெறுவதற்கு யாழ் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் பகுதிக்கு வருமாறு அழைக்கப்படுகின்றனர் இப்பகுதியில் சிரேஷ்ட விரிவுரையாளர்கள் மாணவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கிவருகின்றனர். அதேவேளை 91/92 ஆம் வருட மாணவர்களின் நலன்கருதி விசேட கல்விக் கருத்தரங்குகள் விரைவில் நடைபெற இருப்பதாக வெளிவாரிப் பட்டப்படிப்புகளுக்கான இணைப்பாளர் பேராசிரியர் திரு பொ.பாலசுந்தரம் பிள்ளை தெரிவித்தார்.

## உலகத்

சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறும்.

சகல அங்கத்தவர்களையும் தவறாது சமூகம் தரும்படியும் இக் கூட்டம் இல. 33, பருத்தித்துறை வீதி (ஆரியகுளம் சந்தி) யில் உள்ள யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனப்பணிமனையில் நடைபெறும் என இலங்கைக் கிளை இணைச் செயலாளர் சி. சி. வரதராசா தெரிவித்துள்ளார். (24)

## மல்வத்த

சென்றவர்களில் பலர் திரும்பி வரவில்லை இந்நிலையில் இம்முகாமில் இருந்து திருக்கோவில், காரைதீவு ஆகிய இடங்களுக்கு இராணுவத்தால் ஏற்றப்பட்டு தங்கவைக்கப்பட்டனர்.

தற்போது முஸ்லிம் இளம் ஆயுதபாணிகள் இவர்களின் வீடுகளில் உள்ள உடமைகளை சூறையாடி வருகின்றனர்.

அகதிகளின் இந்த உடைமைகள் பாதுகாக்கப்பட்டு அவர்கள் தத்தமது இடங்களில் குடியமர்த்த ஆவன செய்யும்படி அம்மகஜரில் கோரப்பட்டுள்ளது.

## Remembrance

*Hartley College Past Pupils Association toudly, gratefully and prayerfully remembers Emeritus Principal W. N S Samuel, died on 26-06-92 at 10, Greenways Rd, Adayar, Madras 28, India.*

# கரப்பொல கிராம மக்கள் பாதுகாப்பற்ற நிலையில்

வெலிக்கந்த பகுதியிலுள்ள கரப்பொல, முத்துகல் கிராமங்களில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவங்களையடுத்து அங்கிருந்து இடப்பெயர்ந்த தமிழ் மக்களை மீண்டும் இராணுவம் அப்பகுதிகளில் குடியமர்த்தச் செய்தமை குறித்து புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வருடம் ஏப்ரல் மாதம் 29 ஆம் திகதியன்று அழிஞ்சிப்பொத்தானையில் நடந்த சம்பவத்தைத் தொடர்ந்து கரப்பொல முத்துகல பகுதியில் 80 தமிழர்கள் வெட்டிக்கொலை செய்யப்பட்டதனை அடுத்து அங்கிருந்த சுமார் 250 தமிழ்க் குடும்பங்கள் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பேய்த்தாழை அகதிமுகாமில் தங்கியிருந்தனர்.

ஆனால் இம்முகாமுக்கு சென்ற இராணுவத்தினர் கடந்த செவ்வாயன்று இவர்களை பலாத்காரமாக கரப்பொல முத்துக்கல் கிராமங்களுக்குக் குடியேற்றுவதற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

இப்பொழுது பாதுகாப்புக்கு உத்தரவாதமற்ற நிலையில் அக் கிராமங்களில் இத்தமிழ்க்குடும்பங்கள் உள்ளனர்.

## வருடாந்த மஹோற்சவம்

உரும்பராய் ஓடையம்பதி கற்பக விநாயகர் கோவில் வருடாந்த மஹோற்சவம் 30-6-92 செவ்வாய்க்கிழமை நண்பகல் 11 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 14-7-92 தீர்த்தத் திருவிழாவுடன் இனிது முடிவுறும்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிகளுக்குப் பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. உடலமைப்பியல் பேராசிரியர்.
2. நோயியல் பேராசிரியர்
3. மனநோயியல் பேராசிரியர்
4. குழந்தை மருத்துவப் பேராசிரியர்
5. அக்கக்கோணல் அறுவை மருத்துவ அறக்கொடைத் தவிசு
6 சமூகவியல் அறக்கொடைத் தவிசு
7. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II - உடல

தற்காலிக விரிவுரையாளர் (மருத்துவம்): ரூபா 4 900/- மாதமொன்றுக்கு உதவி விரிவுரையாளர்: ரூபா 3,900/ மாதமொன்றுக்கு (நிலையானது) ஓராண்டிற்கு

ஓராண்டுத் திருப்திகரமான சேவையை நிறைவு செய்த பின்னர் துணைவேந்தர் ரூபா 4,500-10 X200-6,500/-(மாதமொன்றுக்கு) சம்பள அளவுத் திட்டத்தில் 4,500/ சம்பளப் படியில் வைப்பார். தற்காலிக உதவி விரிவுரையாளர்: ரூபா 3,900/- மாமொன்றுக்கு (நிலையானது)

பேராசிரியர்களுக்கும், அறக்கொடைத் தவிசுகளுக்கும் விண்ணப்ப முடிவுத் திகதி 1992-09-30 ஏனையோருக்கு முடிவு திகதி 1992-08-17 ஆகும்.

1 மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களையும் இதர விபரங்களையும் இப்பல்

## எதிரியின்

றொழிப்பதற்குத் திட்டம் போடுகின்றான்.

இவ்வாறு கொன்றொழிப்பதன் மூலம் எமது தேசியப் படையணியின் பலத்தைச் சிதறடிக்கலாம் என நினைக்கிறான்.

கட்டைக் காட்டில் தனது இராணுவத் தளபாடங்களையும், படையணியையும் இறக்கிப் பாரிய படையெடுப்பை நடாத்தத் திட்டமிட்டுள்ள எதிரி இவ்வகையான பொய் வதந்திகளைப் பரப்பித் தனது இலக்கை இலகுவாக்க முயல்கிறான். எமது தமிழீழப் பரப்பைத் துண்டாட நினைக்கின்றான்.

மனித நாகரீகத்திற்கு அப்பாற்பட்ட முறையில் வடமராட்சியில் 'ஒப்பரேசன் லிபரேசன்' இராணுவ நடவடிக்கையின் போதும் இடம்பெயருமாறு வானொலி மூலமும், துண்டுப்பிரசுரங்கள் மூலமும் அறிவித்து விட்டுக் குறிப்பிட்ட கோயில்கள், பாடசாலைகள் மீது விமானத் தாக்குதலும், எறிகணைத் தாக்குதலும் மேற்கொண்டமை எம் மனங்களைவிட்டு அகலவில்லை

அண்மையில் தெல்லிப்பழையில் நடந்த சண்டையின் போது கோயில்களில் மக்களைக் கூடும்படி அறிவித்து விட்டுத் துர்க்கை அம்மன் ஆலயத்தின் மீது கோரக் குண்டு வீசி 06 பொதுமக்களைக் கொன்றொழித்த வடு இன்னமும் ஆறவில்லை.

எனவே, எம்மினிய மக்களே! எதிரியின் இவ்வகையான வதந்திகளை, அறிவித்தல்களைக் கேட்டு ஏமாறாதீர்கள். அல்லலுற்று அலையாதீர்கள். எதிரியின் சதித்திட்டத்திற்குப் பலியாகாதீர்கள். எமது இருப்பிடங்களை விட்டு ஓடுவதில் எவ்வித பயனுமில்லை.

யாழ் குடாநாட்டைவிட்டே எதிரி எம்மை இடம் பெயரும்படி அறிவித்தால் எம்மால் இடம்பெயர முடியுமா? இடம் பெயர்ந்து நாம் எங்கு செல்வது? எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## பாதுகாப்பு

திகள், நவீன சந்தைக்கட்டடம் ஆகியவற்றில் தமது சில உடைமைகள் அடங்கிய மூட்டை முடிச்சுகளுடன் ஆயிரக்கணக்கான மக்கள் தங்கியிருந்தனர். வீதி ஓரங்களிலும் வீதிப்படிக்கட்டுகளிலும் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட அனைத்துத் தரப்பினரும் படுத்துறங்குவதை நள்ளிரவு நேரம் அவதானிக்க முடிந்தது. நேற்று நண்பகலுடன் நகரப்பகுதி வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டதும் இடம்பெயர்ந்து வந்த மக்கள் மேற்படி பகுதிகளை தமது தற்காலிக தரிப்பிடமாக்கும் முகமாக தமக்கிடையே பங்குபோட்டுக்கொண்டுவிட்டனர்.

(க, ச)

## பாரிய

டிக்கையினால் அப்பகுதியை விட்டு வெளியேறியுள்ளனர். இக் கிராமத்திற்குச் சமீபத்தில் அருவி ஆறு உள்ளது. இந்த ஆறு அமைந்துள்ள பகுதியில் உள்ள காடுகள் இராணுவத்தின் துணையுடன் சிங்களவர்களினால் வெட்டி வீழ்த்தப்பட்டு அங்கே குடியேற்றம் மேற்கொள்ளப்படுகிறது.

அருவி ஆறு கட்டுக்கரை குளத்தைச் சென்றடைகிறது. இந்த ஆறு தற்போது தடுக்கப்பட்டு அதன் நீரில் மரமுந்திரிகை பயிரிடப்படுகிறது. இந்தக் குடியேற்ற நிலப்பகு

## சங்காபிஷேகம்

(கொழும்புத்துறை)

யாழ் வண்ணை அருள்மிகு ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் ஆலய வருடாந்த சங்காபிஷேகம் இன்று 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு நடைபெறும்.

கம்பன் கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் பிற்பகல் 4-00 மணி தொடக்கம் 5-00 மணி வரை 'பணிந்தேன் அறிந்தேன்' என்னும் தலைப்பில் உரை நிகழ்த்தவுள்ளார்.

## அமைய

மாகாண பிரதம செயலாளரின் பணிப்பின் பேரில் சேவையிலிருந்து நீக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ் அமைய ஊழியர்கள் ஏழு பேர்களும் கடந்த எட்டரை வருடங்களாக சேவையாற்றியது குறிப்பிடத்தக்கது. (24)

## யாழ்.

தியோக பூர்வமாக தமக்கு இதுவரை எதுவித தகவல்களும் கிடைக்கவில்லை என்றும் அவ்வாறு பாதுகாப்பு வலயத்தை நீக்கும் சாத்தியமும் இல்லை

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் 1992 ஆகஸ்ட் 17 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

பதவிகள்

1. தாவரவியலில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/ உதவிவிரிவுரையாளர் (தகுதிகாண்)
2. இரசாயனவியலில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II / உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)
3. பௌதிகவியலில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II / உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)
4. விலங்கியலில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II/ உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)
5. கணிதமும், புள்ளிவிபரவியலில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I / சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II / உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)

சம்பள அளவுத்திட்டம்

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I: ரூபா 9,600 - 8 X 250 = 11 600/- (மாதமொன்றுக்கு)

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II: ரூபா 8,000- 5X 250 = 9 250/- (மாதமொன்றுக்கு)

(உதவி விரிவுரையாளர்: தகுதிகாண்) ரூபா 3 900/- மாதமொன்றுக்கு (நிலையானது) (ஆண்டொன்றுக்கு)

(துறைத் தலைவரினாலும் பீடாதிபதியினாலும் ஓராண்டுச் சேவையைத் திருப்திகரமாக நிறைவுசெய்துள்ளாரென அத்தாட்சிப்படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) ஒரு

*Hartley College Past Pupils Association toudly, gratefully and prayerfully remembers Emeritus Principal W. N S Samuel, died on 26-06-92 at 10, Greenways Rd, Adayar, Madras 28, India.*

*"Our gratitude is more than we can say"*

*May his soul rest in peace.*

(2729)

## இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம், யாழ்ப்பாணக் கிளைத் தலைமையலுவலகம்

# முக்கிய அறிவித்தல்

1. இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினால் முதலுதவி, உதவித் தாதியர், ஆரம்ப சுகாதார சேவை, சுய தொழில் முயற்சி, தையல் பயிற்சி. போன்ற சகல துறைகளிலும் பயிற்றப்பட்ட, பயிற்றப்படுகின்றவர்கள் தொண்டர்கள், அங்கத்தவர்கள் அனைவரும் இன்று 28-06-92 மாலை 3-00 மணிக்கு அவ்வப் பிரிவு செஞ்சிலுவைப் பணிமனைக்கு வருகை தரும்படி வேண்டப்படுகின்றனர்.

2. சகல பிரிவுச் செஞ்சிலுவைச் செயற்குழுக்களும் தமது பணிமனைக்கு வருகை தரும் மேற்படி பயிற்சியாளர்கள், தொண்டர்கள், அங்கத்தவர்கள் உதவியுடன் அனர்த்தங்களை எதிர் கொள்வதற்கு எவ்வாறான நடவடிக்கைகளை எடுப்பது என்பதையிட்டுக் கலந்தாலோசித்துத் தேவையான உடனடி நடவடிக்கைகளை எடுக்கும் வண்ணம் வேண்டுகின்றேன்.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்,
27 - 06 - 1992.

செஞ்சிலுவைச் சங்கச் சேவையில்,
ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்.

(சி / 4620)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி. 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது

அறுவை மருத்துவ அறக் கொடைத் தவிசு

6 சமூகவலயியல் அறக் கொடைத் தவிசு

7. சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II - உடலமைப்பியல் / உடற்றொழிலியல் / சமுதாய மருத்துவம் / சட்ட மருத்துவம் / நுண்ணுயிரியல் / ஒட்டுண்ணியியல் / நோயியல் / மருந்தியல் / மருத்துவம் / மகப்பேற்றுமருத்துவமும் மாதர் நோயியலும் / குழந்தை மருத்துவம் / அறுவைமருத்துவம்

8. விரிவுரையாளர் / தற்காலிக விரிவுரையாளர் - உயிர் இரசாயனவியல் / உடலமைப்பியல் / உடற்றொழிலியல் / சமுதாய மருத்துவம் / சட்ட மருத்துவம் / நுண்ணுயிரியல் / ஒட்டுண்ணியியல் / நோயியல் / மருந்தியல் மருத்துவம் / மகப்பேற்று மருத்துவமும் மாதர் நோயியலும் / குழந்தை மருத்துவம் / அறுவை மருத்துவம்

9. உயிர் இரசாயனவியலில் உதவி விரிவுரையாளர் / தற்காலிக உதவி விரிவுரையாளர்

### சம்பள அளவுத் திட்டம்

பேராசிரியர் தரம் II: ரூபா 12,200-6X300-14,000/ மாதமொன்றுக்கு
சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் II: ரூபா 8,000:5X250-9.250/- மாதமொன்றுக்கு
விரிவுரையாளர் (மருத்துவம்): ரூபா 4,500 - 10X200-6,500/ மாதமொன்றுக்கு (மருத்துவ பீடத்தின் விரிவுரையாளருக்கு முதல் நியமனத்தின் போது மேற்குறித்த சம்பள அளவுத் திட்டத்தில் இரண்டு படி அதிகமாக வழங்கப்படல் வேண்டும். அதாவது 4 900/ சம்பளத்தில் வைக்கப்படல் வேண்டும்.

ஏனையோருக்கு முடிவு திகதி 1992-08-17 ஆகும்.

1 மேற்குறித்த பதவிகளுக்கான விண்ணப்பப் படிவங்களையும் இதர விபரங்களையும் இப்பல்கலைக் கழகத் தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

2. விண்ணப்பப் படிவங்களைத் தபாலிற் பெற விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களுக்கான வேண்டுகோளுடன் 23X10 ச. மீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடித உறை இணைத்தனுப்பப்படல் வேண்டும்.

3. அரசாங்கத்திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் என்பனவற்றிலுள்ள விண்ணப்பதாரிகள் அந்நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

4. ஒரு பதவிக்கு மேல் விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும்.

5. தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களின் சிறப்புத் தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத் திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.
குறிப்பு: ஒப்பந்த அடிப்படையிலான நியமனமும் கவனிக்கப்படும்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம், திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992 - 06 - 25

(சி/4618)

... வெளிவிடப்படுகிறது.
அருவி ஆறு கட்டுக்கரை குளத்தைச் சென்றடைகிறது. இந்த ஆறு தற்போது தடுக்கப்பட்டு அதன் நீரில் மரமுந்திரிகை பயிரிடப்படுகிறது. இந்தக் குடியேற்ற நிலப்பகுதியில் தென்னையும் பயிரிடப்படுகிறது. நூற்றுக்கணக்கான சிங்களக் குடியேற்றவாசிகள் இவ்வேலையில் ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் உள்ள தமிழ்ப் பகுதி கமநல சேவை நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்படவிருந்த சுமார் முப்பது ஆயிரம் தென்னங்கன்றுகள் இப் புதிய சிங்களக் குடியேற்றப் பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது.

இப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையத்தில் உள்ள பொலிஸார் குடியேற்றத் திட்டத்திற்கு உதவுவதுடன் நிர்வாகத்தையும் மேற்கொண்டு வருகின்றனராம்.

இதனுடன் அண்டிய பகுதியான மதவாச்சி-செட்டிகுளம் பிரதான வீதியில் உள்ள தந்திரிமலைச் சந்திப்பகுதியில் பௌத்த விகாரை ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இப் புதிய சிங்களக் குடியேற்றத்திட்டப் பகுதியைச் சுற்றி மினி இராணுவ முகாம்கள் பல அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (தி)

...தியோக பூர்வமாக தமக்கு இதுவரை எதுவித தகவல்களும் கிடைக்கவில்லை என்றும் அவ்வாறு பாதுகாப்பு வலையத்தை நீக்கும் சாத்தியமும் இல்லை என்றும் அவர் கூறினார்.

இப்பகுதியில் செஞ்சிலுவைச் சங்க வாகனமொன்று தொடர்ந்து ரோந்துவருவதாகவும் எதுவித இராணுவத் தாக்குதல்களும் அப்பகுதியில் இடம் பெறமுடியாது எனவும் மக்கள் அச்சமின்றி அப்பகுதியில் நடமாடலாம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

### தொழிற் சங்க

...தின்கீழ் போய்விட்டனஎனவே நாம் அந்த நிர்வாகத்தில் ஊடுருவல் செய்ய முடியாது.

புதிதாக பொறுப்பேற்றுள்ள கம்பனிகள் கூடியஇலாபத்தை பெறும் நோக்கத்துடன் தொழிலாளர் மத்தியில் கெடுபிடிகளை அதிகரிக்கலாம் அங்கு அவற்றைசமாளிப்பதற்கு அடிமட்டம் முதல் உறுதியான தொழிற்சங்க அமைப்பு அவசியம். இவ் விடயத்தில் தோட்டக் கமிட்டிகளும் மாவட்ட கமிட்டிகளும் பலம் பொருந்தியதாக அமைய வேண்டும் நாம் அரசின் ஓர் அங்கம் என்பதை மறந்து விட்டு எமது தொழிற்சங்கத்தின் மூலம் எமது அடிப்படை உரிமைகளை பாதுகாக்க எம்மை தயார் படுத்திக் கொள்ள வேண்டும் எனத் தெரிவித்தார்.

...லும் ஓராண்டுச் சேவையைத் திருப்திகரமாக நிறைவுசெய்துள்ளாரென அத்தாட்சிப்படுத்தப்பட்ட உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) ஒருவரை விரிவுரையாளர் (தகுதிகாண்) என்றபதவிப் பெயரில் நியமிக்கலாம் என்பதுடன் அணைவேந்தர் அவரை ரூபா 4 500/- 10x200 - 6 500/- (மாதமொன்றுக்கு) சம்பள அளவுத்திட்டத்தில் வைக்க முடியும்)

யாழ்ப்பாணப்பல்கலைக் கழக தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப்பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல்வேண்டும். தபால் மூலம் படிவங்களையும் இதர விபரங்களையும் பெற விரும்புபவர்கள்23X10சதமமீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்டு ரூபா 2/- முத்திரையொட்டப்பெற்ற தபால் உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத்திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும். தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின் சிறப்பு தகைமைகளையும்/அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின்பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

பதிவாளர்,
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992.06 26

(சி/4617)

## உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

**27. 06. 1992**

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 4605

வடபகுதிக்கு வெளியே அனுமதிக்கப்பட்ட வாகன இலக்கங்கள்:-

26-1745, 41-8068, 27-5099, 27-9033, 26-5560, 26-506, 28-732, 28-940, 27-2004, 28-3029, 26-5725, 26-736, 42-6919, 28-2342, 42-9625, 26-1376, 28-7978, 41-9663, 25-6413, 25-6896, 71-5058.